**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**MCOP No: 128/2023**

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 09 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | நாகஜோதி |
| த.க.பெயர் | வீரனன் |
| கிராமம் | சென்னியவலசு |
| மாவட்டம் | |
| வயது | 44 |

ம.சா. 1 நாள் 09.07.2026

**முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் இம்மனுவின் 1 ம் மனுதாரர். 2 ம் மனுதாரர் எனது மகன். 3 ம் மனுதாரர் எனது மாமியார். மனுதாரர்கள் சார்பாக என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1. | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ.1 |
| 2. | 1 ம் மனுதாரரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.2 |
| 3. | 2 ம் மனுதாரரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.3 |
| 4. | 3 ம் மனுதாரரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.4 |
| 5. | பிரேத பரிசோதணை அறிக்கை | ம.சா.ஆ.5 |
| 6. | வீரணனின் இறப்பு சான்று | ம.சா.ஆ.6 |
| 7. | வீரணனின் வாரிசு சான்று | ம.சா.ஆ.7 |
| 8. | 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | ம.சா.ஆ.8 |
| 9. | 2 ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள வாகனத்தின் பதிவு சான்று | ம.சா.ஆ.9 |
| 10. | 3 ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள காப்பீட்டு சான்று | மசாஆ 10 |
| 11 | என் மகள் பவித்ராவின் இறப்பு சான்று | மசாஆ 11 |

| | | |
|---|---|---|
| 12 | என் மாமனாரின் இறப்பு சான்று | மசாஆ 12 |
| 13 | மனுதாரரின் குடும்ப அட்டை | மசாஆ 13 |
| 14 | வீரணனின் வாக்காளர் அடையாள அட்டை | மசாஆ 14 |
| 15 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை(சரக்கு வாகனம்) | மசாஆ 15 |
| 16 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை ( இரு சக்கர வாகனம்) | மசாஆ 16 |
| 17 | பார்வை மகசர் | மசாஆ 17 |
| 18 | மாதிரி வரைபடம் | மசாஆ 18 |
| 19 | குற்ற இறுதியறிக்கை | மசாஆ 19 |
| 20 | குற்றவியல் வழக்கில் ஏற்பட்ட முடிவு | மசாஆ 20 |
| 21 | வீரணன் பெயரில் உள்ள பதிவு சான்று | மசாஆ 21 |
| 22 | வீரணனின் ஓட்டுநர் உரிமம் | மசாஆ 22 |
| 23 | வீரணனின் ஆதார் அட்டை | மசாஆ 23 |
| 24 | 1 ம் மனுதாரரின் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல் தாள் | மசாஆ 24 |
| 25 | 2 ம் மனுதாரரின் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல் தாள் | மசாஆ 25 |
| 26 | 3 ம் மனுதாரரின் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல் தாள் | மசாஆ 26 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

**குறுக்கு விசாரணை (3 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில்)**

விபத்து ஏற்பட்டு 11 ஆண்டுகள் கழித்து மனு தாக்கல் செய்துள்ளதால் மனு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்திற்கு 1 ம் எதிர்மனுதாரர் காரணம் என நான் நேரில் பார்க்காமல் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் தலைக் கவசம் அணிந்திருந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் தான் இறந்ததாக பிரேத பரிசோதணை அறிக்கை மற்றும் குற்ற அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு காரணம அல்ல என விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1 ம் எதிர்மனுதாரர் காரணமல்ல என்றால் சரியல்ல. விபத்தின்போது இரு சக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணித்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தான் காரணம என்றால் சரியல்ல.

என் கணவரின் வயதை குறைத்து காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. மசாஆ 21 என் கணவரின் தொழில் குறித்த ஆவணம் அல்ல என்றும் என் கணவரின் வருமானம் குறித்து ஆவணங்கள் நான் தாக்கல் செய்யாத நிலையில் அது ஏற்கத்தக்கதல்ல என்றால சரியல்ல. நான் என் கணவர் அனைவரும் சேர்ந்து தான் தொழில் செய்து வந்தோம் என்றும் என் கணவரின் இழப்பால் எங்களுக்கு வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. என் மகனுக்கு தற்போது திருமணம் ஆகி அவர் தனியாக உள்ளார். விபத்து ஏற்பட்டபோது என் மகனுக்கு 17 வயது, அவர் 12 ம் வகுப்பு படித்து வந்தார். பின்பு அவர் படிப்பை தொடரவில்லை. 3 ம் மனுதாரர் எங்களுடன் இருந்ததாகவும் என் கணவரின் வருமானத்தை நம்பியிருந்தாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் யாரும் என் கணவரின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றால சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமீறல் ஏற்படுத்தியுள்ளதால் 3,4 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு செலுத்த பொறுப்பல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்ப வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.07.09 16:53:08 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS